# தேசிய பெண்கள் பாதுகாப்பு சட்ட மசோதா தாக்கல் செய்ய நடவடிக்கை

## கோவையில் லலிதா குமாரமங்கலம் பேட்டி

கோவை,ஜூன்.15– தேசிய பெண்கள் பாதுகாப்பு சட்ட மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்து சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கோவையில் தேசிய பெண்கள் ஆணைய தலைவர் லலிதா குமாரமங்கலம் கூறினார்.



லலிதா குமாரமங்கலம்

### பெண்களுக்கான எதிரான வன்முறைகள்

புதுடெல்லி தேசிய பெண்கள் ஆணைய தலைவர் லலிதா குமாரமங்கலம், கோவை அமிர்தா பல்கலைக்கழகத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

இந்தியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. உத்தரபிரதேசம், டெல்லி, அரியானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இது அதிகமாக காணப்படுகிறது. 60 முதல் 70 சதவீத பெண்கள் வரதட்சணை கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். விவாகரத்து ஆனவர்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் என தனித்து வாழும் பெண்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகிறார்கள்.

இதேபோல் மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். இவ்வாறு பல்வேறு வடிவங்களில் பெண்களுக்கான எதிரான வன்முறைகள் பெருகி வருகின்றன. இதை தடுக்க தேசிய மகளிர் ஆணையம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

### மதுவால் பாதிப்பு

சமுதாயத்தில் தங்கள் குடும்பம் மற்றும் குழந்தைகளை காப்பாற்றும் பொறுப்பை பெண்கள் பலர் சுமந்து வருகிறார்கள். இந்தியாவில் 69 சதவீத பெண்கள் விவசாய தொழிலாளர்களாக உள்ளனர். கட்டுமானம் சார்ந்த பணிகளிலும் பெண்கள் கணிசமாக ஈடுபட்டு வருகிறார்கள். இந்தநிலையில் பெண்கள் பணிபுரியும் இடங்களில் பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது.

பொது இடங்களில்கூட இதே நிலைதான் காணப்படுகிறது. இதுபோன்ற சூழல்களில் இருந்து பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மது குடிக்கும் கணவனால் ஏராளமான பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். மது குடிப்பது பழக்கம் அல்ல, அது ஒரு நோய். இன்று சிறுவர்களும் மது குடிப்பதை பார்க்க முடிகிறது. எனவே குடியிருப்பு பகுதிகளில் உள்ள மதுக்கடைகளை மூடினால், சிறுவர்கள் மது குடிப்பதை தடுக்க முடியும்.

### சட்ட முன் வரைவு மசோதா

எனவே சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். குடும்பம் முதல் சமுதாயம் வரை எந்த பிரச்சினை என்றாலும் முதலில் பாதிக்கப்படுவது பெண்கள்தான்.

பெண்களின் பாதுகாப்புக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களின் கீழ், நிதியுதவி அளித்து வருகிறது. இது பற்றி பெண்களுக்கு போதிய விழிப்புணர்வு இல்லாததால், அவற்றை பெறுவதில் இடர்பாடுகள் ஏற்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் தேசிய பெண்கள் ஆணையம், தேசிய பெண்கள் பாதுகாப்பு கொள்கைக்கான மசோதாவை தயாரிக்க திட்டமிட்டு உள்ளது. இதற்காக மும்பை, ஐதராபாத், கவுகாத்தி, டெல்லி, புனே ஆகிய 5 நகரங்களில் பொதுமக்களிடம் கருத்து கேட்கப்பட உள்ளது. இதில் பெண்கள் பாதுகாப்பு தொடர்பான அனைத்து அம்சங்களும் இடம்பெறும். அதன் பின்னர் இந்த சட்ட முன்வரைவு மசோதா மத்திய அரசிடம் தாக்கல் செய்யப்பட்டு, பாராளுமன்றத்தில் சட்டமாக இயற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### தேசிய கருத்தரங்கம்

முன்னதாக தேசிய பெண்கள் ஆணைத்தின் நிதியுதவியுடன், அமிர்தா பல்கலைக்கழக சமூக பணி இயல் துறை சார்பில், 'குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்– சவால்களும்' என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கம், பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

தேசிய பெண்கள் ஆணைய தலைவர் லலிதா குமாரமங்கலம் கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசினார். கருத்தரங்கில் சமூகப்பணியியல் துறைத் தலைவர் எம்.கே.சுஜா, சுவர்கா அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் ஜெ.சுவர்ணலதா, அமிர்தா என்ஜினீயரிங் கல்லூரி டீன் சசாங்கன் ராமநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.